இப்போது சட்டம் இல்லாத நேரத்தில், சட்டம் கொண்டு வந்தால் என்னவாகும் என்று பேசுவது சரியல்ல. மற்றப்படி பிரச்னைகளைப் பரிசீலிப்பதற்கு கமிஷன் போட இருக்கின்றோம். அதில் முடிவெடுக்கலாம். எனவே இந்தச் சட்டத்தை மாமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1972) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 34/1972) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண திருத்த சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 35/1972).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண திருத்த சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

என்று முன்மொழிகின்றேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: முன் மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

@ 384–385-ஆம் பக்கத்தில் இணைப்பு VI -ஆக அச்சிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்தக் குத்தகை உரிமைகள் ஆவண திருத்த மசோதா மீது பேசுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் அளித்தற்கு நன்றி. இந்தமசோதா முதலிலேயே, சட்டமன்ற ஆய்வுக் குழுவினால், 1970-ம் ஆண்டு என்று நினைக்கின்றேன், ஆராயப்பட்டது. ஆய்வுக் குழுக் கூட்டங்கள் பல அப்போது நடைபெற்று, அதனுடைய அடிப்படையில்தான் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டது. ஆய்வுக்குழுவில் ஒரு உறுப்பினராக இருக்கிற வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. அப்போது பல காரணங்களுக்காக இச் சட்டத்தின் பிரிவுகள் இயற்றப்பட்டன. ஆனால் அப்போது எடுத்த கருத்துக் களுக்கு மாறாக இன்றைய சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருப்பதாக நான் அஞ்சுகிறேன். அப்பொழுது மேல் விசாரணை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தான் இருக்க வேண்டுமென்று பல காரணங்களுக்காக தீர்மானிக் கப்பெற்றது. அந்தக் காரணங்கள் ஆய்வுக்குழு அறிக்கையில் கூறப்பட்டுள் ன. முக்கியமாக மூன்று வித காரணங்களுக்காக இந்த மசோதா கொண்டு வரப்படுகிறது. ஒன்று தன்னிச்சையாக குத்தகை ஆவண தாசில்தார்கள், குத்தகைதார்கள் யார் யார் என்று நிர்ணயிப்பதற்கான ஒரு அதிகாரத்தை இந்த மசோதா கொடுக்கிறது. குத்தகைதார்களை பதிவு செய்வதற்காக இச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது தங்களுடைய பெயர்களை பதிவு செய்து கொள்ள குத்தகைதார்கள் ஆயிரக் கணக்கில் தாங்களாகவே அரசு அதிகாரி களை நாடுவார்கள் என்ற அபிப்பிராயம் இருந்தது. ஆனால் என்ன நிலைமை உருவாயிற்று ? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் இப் பதிவை முடிக்க கிட்டத்தட்ட 2, 3 ஆண்டுகள் ஆகிவிட்டன என்று தஞ்சை, திருச்சி, மதுரை ஆகிய மூன்று மாவட்டங்களுக்குத்தான் முதன் முதலாக இந்தப் பதிவு முறை ஏற்படுத்தப்பட்டது. ஆனால், தஞ்சை மாவட்டத்தில்தான் ஓரளவுக்கு அங்கு இருக்கிற விவசாயக் குத்தகைதார்கள் இந்த ஆவணத்தில் பதிவு செய்து கொண்டுள்ளதாக நினைக்கிறேன். திருச்சி, மதுரை மாவட்டங்களில் பார்க்கிறபோது, பாதி அளவுதான் நடந்திருக்கக் கூடும். எத்தனை சதவீதம் நடந்திருக்கிறது என்று தெளிவாகத் தெரியா விட்டாலும், அரசு எண்ணியபடி வேகமாக நடக்கவில்லை. அதிகாரிகளைக் குறை சொல்லவில்லை. குத்தகைதார்களுக்கு ஆர்வக்குறைவு என்பதுதான் தெரிகிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நண்பர் அவர்களுக்குச் சொல்கிறேன். தஞ்சை, திருச்சி, மதுரை இந்த 3 மாவட்டங்களிலும் ஒரு மாதத்தில் இதை நடத்தி 31—12—1972-க்குள் பதிவு செய்ய வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திரு. ஜி. சுவாமிநாதன் : மிக்க மகிழ்ச்சி. தஞ்சை ஜில்லாவில் 80 சதவிகிதம் ஆகிவிட்டது. இப்போதுதான் மதுரை, திருச்சி மாவட்டங்களில் பதிவேட்டு வேலையை ஆரம்பிக்க முடிந்திருக்கிறது. ஆனால் தஞ்சையில் இருக்கிற உற்சாகம் மற்ற மாவட்டங்களில் இல்லை. அந்த மாவட்டங்களில் எப்படியிருக்கும் என்ற நிலைமை இனிமேல்தான் போகப் போகத் தெரியும். இந்த நிலைமையைப் பற்றி முன்னாள் குத்தகைப் பதிவு டைரக்டர் அவர்களே எழுதினர். இந்தக் குத்தகைதார்களுக்கு இந்தச் சட்டத்தில் பதிவு செய்துகொள்ள அக்கறையில்லை. அவர்களுக்கே அக்கறை இல்லாதபோது அரசாங்கம் சட்டம் கொண்டு வரவேண்டிய அவசியமோ, இது மாதிரி பதிவு செய்ய வேண்டிய தேவையோ அதற்கு ஒரு இயக்குனரோ வேண்டியதில்லை என்று அவர் எழுதினார். அவர் சொல்வது தவறு இல்லையா என்பதல்ல முக்கியம். நான் குறிப்பிடுவதெல்லாம், குத்தகைதார்கள் அசிரத்தையாய் இருக்கிறார்கள் என்பதைத்தான். இம் மசோதாவில் குறிப்பிட்டிருக்கிறார்கள், ஆங்காங்கே உள்ள தாசில்தார்கள் தன்னிச்சையாக குத்தகைதாரர்களை பதிவு செய்துகொள்ளலாம் என்று. 'சுவோமோட்டோ' என்ற ஆங்கில வார்த்தைக்கு அதுதான் பொருள் என்று நினைக்கிறேன். அதில் நிலச் சுவான்தார்களோ, அல்லது குத்தகைதார்களோ அல்லது விவசாயத் தொழிலாளர்களோ மற்றவர்கள் யாராவதோ ஒருவர் கூட மனு அனுப்பாமல் இருந்தால் அதைச் செய்வதில் நியாயம் உண்டு. ஆனால் பலர் அனுப்பி யாராவது ஒருவர் விவரம் தெரிவிக்காவிட்டால் தாசில்தார் தானாகவே செய்துகொள்ளலாம் என்று சட்டத்தில் போட்டிருப்பது சரியாகத் தெரியவில்லை. எந்த அடிப்படையில் தன்னிச்சையாகச் செய்யலாம் என்பதில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். நிலச்சுவான்தார் ஒரு நிலத்தை தன் சொந்தப் பண்ணையில் வைத்திருக்கலாம். அங்கேயிருக்கிற ஒருவரும் நான் குத்தகை விவசாயம் செய்கிறேன் என்று சொல்லாமலும் இருக்கலாம். அப்படியிருக்கும்போது, குத்தகை ஆவண தாசில்தார் அந்நிலத்தை குத்தகையில் இருப்பதாக தன்னிச்சையாக பதிவு செய்யக் கூடும். இப்பொழுதுள்ள சட்டப்படி மசோதாவில் பேர் சேர்க்க என்னென்ன வரைமுறைகள் வேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறார்கள். அதிகாரிகள் கிராமவாசிகளுக்கு நோட்டீஸ் மூலமும், தண்டோரா மூலமும் தெரிவிக்க வேண்டும் என்று சொன்னோம். பஞ்சாயத்து அலுவலகத்தில் நோட்டிஸ் ஒட்டவேண்டும். அவ்வாறு நோட்டிஸ் போட்டு எந்த நிலத்தை எப்படிப் பதிவு செய்யவேண்டும் என்பதை விதிமுறைகளோடு வரைமுறைகளோடு செய்யவேண்டும். ஆனல் இப்போது தன்னிச்சையாக தாசில்தார்கள் பதிவு செய்யலாம் என்று இருக்கிறபோது, வரைமுறையே இல்லாமல் அவர்கள் செயல்பட முடியும். எந்த நிலத்தைப் பற்றியாவது நிலச்சுவான்

1972 ஆகஸ்டு 25] [திரு. ஜி. சுவாமிநாதன்]

தாரோ குத்தகைதாரரோ பெயரை பதிவு செய்யாமல் விட்டுவிட்டால், தாசில் தாரே தானாக யாராவது ஒருவர் பெயரை குத்தகைதாரர் என்று எழுதிக் கொண்டு போகும் துர்ப்பாக்கியமான ஒரு நிலைமை ஏற்படக்கூடும். தவறு ஏற்பட்டால் கோர்ட்டுக்குப் போகலாம் என்று மூல சட்டத்தில் இருக்கிறது. இப்பொழுது, கோர்ட்டுக்கும் போகக்கூடாது என்று அரசு முடிவு செய்கிறது. இப்போது இருக்கிற நிலைமை என்னவென்றால், அரசு செய்கிற காரியங்களை யாராவது எதிர்த்துப் பேசவேண்டும் என்றால், கோர்ட்டில் போய்த்தான் எதிர் வழக்காட முடியும். வரவர சட்டங்கள் கோர்ட்டுக்குப் போகாமல் இருக்கும் படியாக நிர்ணயிக்கப்படுகின்றன. கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று குறிப்பிடுகிற சட்டங்கள் ஏதாவது உண்டா என்று ஒரு நண்பரைக் கேட்டேன். இதற்கு முன்னால், இந்து ரிலிஜியஸ் எண்டோமெண்ட் ஆக்டில் ஒரு சட்டம் இருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக இந்தச் சட்டத்தில் தான் கோர்ட்டுக்கு போக முடியாத நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று சொன்னார். கோர்ட்டுக்குச் செல்வதில் எந்தவிதத் தவறும் இல்லை. தாசில் தார் தன்னிச்சையாகச் செய்யும்போது அது தவறு என்று சொல்வதற்கு வேறு யாரிடம் போவது? இந்தப் பிரச்னை ஆய்வுக்குழுவில் வந்தபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் ஓரளவு இதில் நியாயமான முறையில் ஒரு முடிவு செய்யலாம் எனவே மேல் விசாரணை அவரிடமும் இருக்கலாம் என்று நான் சொன்னேன். கலெக்டராகவே இருக்கவேண்டும் என்று அந்தப் பொறுக்குக் குழுவில் நான் எடுத்துத் தெரிவித்ததற்குக் காரணம் கீழேயிருக்கிற தாசில்தார் தவறு செய் தால் அந்தத் தவறை நீக்குகிற அதிகாரம் கலெக்டருக்கு இருந்தால் ஓரளவு பாரபட்சமின்றி பதிவுகள் நடக்கக்கூடும் என்பதற்காகத்தான். ஆனால் இதில் கலெக்டர் யாரையாவது நியமித்துவிடலாம் என்று போட்டிருக் கிறார்கள். நாளைக்கு கலெக்டர் இன்னொரு தாசில்தாரைக் கூப்பிட்டு விசாரணை செய் என்று சொன்னால், அது மிகத் தவறாக முடியக்கூடும். கலெக்டருடைய அதிகாரத்துக்குக் குறைவாக அதிகாரம் படைத்தவர்களாய் இருக்கவேண்டு மென்றால், டி.ஆர்.ஓ. அல்லது ஆர். டி. ஓ. அளவிலாவது போடவேண்டும். ஆனால் தாசில்தாரையே மேல் விசாரணைக்குப் போடக்கூடும் என்று சொன்னால் அது சரியாகாது. ஆகவே அந்த அதிகாரம் படைத்தவர் கலெக்டராக இருந்து நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை விவசாயிக்கு இருக்கவேண்டும். அந்த நம்பிக்கை இல்லாத நிலைமையில், கலெக்டருக்கும் விடாமல், அதைக் கோர்ட்டுக்கும் போகாமல் இருக்கும் நிலை சட்டத்தில் செய்வது நல்லதல்ல.

இதைத் தவிர கூறுவதற்கு ஒன்று மில்லை என்று தெரிவித்து இத் திருத்தங் களைப் பற்றி அரசு நல்லமுறையில் கவனம் செலுத்தவேண்டுமென்று மீண்டும் வேண்டி என் பேச்சை முடிக்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : While I appreciate the very good motivations which are behind this Bill and while all of us recognise that tenancy rights have to be recorded in some form or other, I fully support and endorse what has been stated by my hon. Friend Thiru G. Swaminathan. For starting a *suo motu* investigation, Sir, of course a due procedure, I think, has been laid down in the original Act. The Hon. Minister has already gathered information and he will tell us how it will be done. Notice will be sent to the owners, notice will be sent to the tenants but my only fear is that in some districts where tenants do not voluntarily go and register themselves as tenants, there are some fears which they have by registration. I have myself tried to persuade some of the tenants in my village to register themselves under this Act but they have expressed certain apprehensions because they feel that if they register themselves as tenants, they would be forced to pay the annual rent to me which sometimes I happen to waive if the crop does not grow well. This is one of the apprehensions that the tenants in our district have, Sir. Of course, Thanjavur is a highly political district and, therefore, all the tenants may or may not register themselves. That is for my hon. Friend Thiru G. Swaminathan to say. But I am only worried about this, Sir. That is, if the Tahsildar starts *suo motu* investigation let us assume for a moment that no tenant and no owner takes interest in it and he has to start a process all by himself, my only fear is that he should not decide who the tenant is in the Taluk Office itself without visiting the village or the land. In these days, we have to be a little careful because innocent people may be duped and all sorts of extraneous elements may register themselves as tenants hoping to get future benefits which the Hon. Minister has already said is in store for the tenants. My only request to the Hon. Minister is that when a *suo motu* investigation is started by the Tahsildar, the due process of law should be observed and every opportunity should be given. I would also suggest that, to help the Tahsildar, we should have some Taluk Committees consisting of 3 or 4 non-officials selected from various groups so that unfair methods may not be adopted in registering tenancies. I have a very real fear, Sir, that in certain cases, the real tenants and the real owners may be completely ignored and all sorts of false tenancies may be registered just with the influence that they may have

with the Tahsildar. I would tell the Hon. Minister that instead of trying to bring peace into the villages, what we are really trying to do is to disturb the cordial atmosphere that exists and this Bill should not be utilised to create certain new pressures that may develop in our Land Tenurial System. Already there is a fear that much of the cordial relationship that existed between the landowners and tenants is gradually being destroyed by a multiplicity of very complex legislations and my only fear is that this may be another piece of legislation that may be taken advantage of to spoil the atmosphere in the remaining districts of Tamil Nadu which happens to be cordial although in one or two districts, due to political pressures, it may not be so cordial. Thank you, Sir.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஆவணப் பதிவுச் சட்டம்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் விளக்கமாகப் பேசினார்கள். அதை ஆதரித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும் பேசினார்கள். அவர்கள் தெரிவித்த விளக்கங்களுக்கெல்லாம் மிகவும் நன்றி.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இடத்திலிருக்கும் அதிகாரங்களை எடுத்து விடுகிறோம், அவற்றை வேறு யாரிடத்திலோ கொடுக்கப் போகிறோம் என்ற சந்தேகத்தோடு மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கேட்டார்கள். நாங்கள் அந்த அதிகாரத்தை டி.ஆர்.ஓ. இடத்தில்தான் கொடுக்கப் போகிறோம். அந்த வகையில் நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் திருப்தியடையலாம் என்று நம்புகிறேன்.

இன்னும் ஒன்றைக் கேட்டார்கள், ஆவணப்பதிவு ஏடுகள் பற்றி.

"If the party has failed to make an application"

ஒருவர் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று மனுச் செய்தால் விசாரணை செய்து ரிகார்டு செய்ய வேண்டுமென்று போட்டிருக்கிறோம். அதற்கும் மேலே அப்பீல் எல்லாம் இருக்கிறது. சில நிலச் சொந்தக்காரர்களுடைய மிரட்டல்களுக்கோ கட்டுப்பாட்டிற்கோ சிலர் பயப்பட வேண்டிய நிலை ஏற்படலாம். அப்படிப்பட்ட இடங்களில் அதிகாரிகளே போய் பதிவு செய்து கொள்ளலாம் என்று சட்டத்தில் போட்டிருக்கிறார்கள்.

'If he has failed to make an application for inclusion of particulars relating to such land in the approved record of tenancy rights under clause (a) or clause (b) of sub-section (i) of section

4, the record officer shall make in enquiry in respect of the land-owner, intermediary or tenant having interest in such land, in accordance with such procedure as may be prescribed.

ஆவணங்களைப் போடும் பொழுது பாதுகாப்பாகப் போட்டிருக்கிறார்கள். கிராமத்துக்குச் சென்று விசாரணை செய்து பதிவு செய்ய வேண்டுமென்று தான் போட்டிருக்கிறோம்.

சிவில் கோர்ட்டுக்குப் போவதை எல்லாம் தடுத்துவிட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். சிவில் கோர்ட்டுக்குப் போனால் பதிவு செய்வதைத் தடுத்து விடுகிறார்கள். அதனால் தான் அந்த உரிமையைத் தடுக்கிறோம். குத்தகை தாரர்கள் பதிவு எடு அவசியமானது, யார் யார் குத்தகைதாரர் என்று பதிவு செய்ய வேண்டும், அப்போது தான் நியாயம் கிடைக்கும். நிலச் சொந்தக் காரர்களும் நியாயமாக நடந்துகொள்ள வேண்டும். அப்போது தான் அவர்களுக்குச் சேரவேண்டியவைகள் ஒழுங்காகக் கிடைக்கும். அதற்காகத்தான் குத்தகைப் பதிவுச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம்.

குத்தகைக்காரர் யார் யார் என்று பதிவு செய்தால், இரண்டு பேருக்கும் பாதுகாப்பாக இருக்கும். இது எப்போது பூர்த்தியாகும் என்று சந்தேகப் பட்டார்கள். தமிழ்நாடு முழுவதும் 31—12—1972-க்குள் இது பூர்த்தியாகிவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதிகாரிகளும் சுறுசுறுப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். தஞ்சை, திருச்சி, மதுரை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் பதிவு செய்யும் வேலை பூர்த்தியடைந்து விட்டது. அந்த மூன்று மாவட்டங்களிலும் அதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் வேலை முடிந்து விட்டதால், வேறு வேலைக்கு அனுப்பப்படுகிறார்கள். தமிழ் நாட்டில் டிசம்பர் மாதத்திற்குள் இந்த வேலை முடிந்துவிடும். அதற்கு மேலும் சந்தேகமிருந்தால், பாதகம் ஏற்பட்டால், அப்பீல் செய்வதற்கெல்லாம் வரம்பு வைத்திருக்கிறோம் என்று தெரிவித்துக்கொண்டு, இது பாதகமான சட்டமல்ல, இது பாதுகாப்பான சட்டம் என்று சொல்லி, இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

1972 ஆகஸ்ட் 25]

தீர்மானம், மன்றத்தின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. உ. **சண்முகம்** : தலைவரவர்களே,

மாண்புமிகு திரு. ப. உ. **சண்முகம்** : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1972) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1972) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (மூன்றும் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1972).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (மூன்றும் எண்) சட்ட முவைடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1972) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (மூன்றும் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1972) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

@. 386–388 ஆம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.